**<u>STARTING TIME 10.42 A.M</u>**

**<u>IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.</u>**

**<u>O.S. No. 172/2019</u>**

Deposition of **<u>P.W.2</u>** witnesses for Plaintiff Solemnly affirmed by Tmt. S. Malliga, Junior Assistant of this court, on 16.10.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : பழனி Father's Name : வடிவேல் நாயக்கர்

Address : ஆயர்பாடி கிராமம், நெமிலி வட்டம்,
இராணிப்பேட்டை மாவட்டம்.

Age : 60

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பானை எதுவும் வந்ததா என்றால், இல்லை. சாட்சியம் அளிக்க என்னை யார் அழைத்து வந்தது என்றால், வாணியம்மாள் அழைத்து வந்தார். எனக்கு தற்போது என்ன வயது என்றால், 62 ஆகிறது. போடி நாயுடு என்பவரை பார்த்திருக்கிறேனா என்றால், பார்த்துள்ளேன். அவர் ஆயர்பாடி கிராமத்தை சேர்ந்தவர் என்றால், சரிதான். அவருக்கு எத்தனை மகன்கள், மகள்கள் என்று தெரியுமா என்றால், 4 மகன்கள், 3 மகள்கள் ஆகும்.

2. போடி நாயுடுவின் நான்கு மகன்கள் பெயரை எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். போடி நாயுடுவின் மகள்கள் பெயரை பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால், சரிதான்.

போடி நாயுடுவின் மகள்கள் பெயர் ஜெயம்மாள், கமலம்மாள், காமாட்சி என்றால், சரிதான். போடி நாயுடுவின் மனைவி பெயர் சுப்பம்மாள் என்றால், சரிதான்.

3. போடி நாயுடுவிற்கு ஆயர்பாடி கிராமத்தில் எவ்வளவு விஸ்தீரணம் நிலம் சொந்தமாக இருக்கிறது என்றால், தெரியவில்லை, ஆனால் அவர் எனது பக்கத்து நிலத்துக்காரர் ஆவார். போடி நாயுடு 17.12.1988 அன்று காலமாகிவிட்டார் என்றால், சரிதான். அவரது மகன் கோவிந்தராஜ் நாயுடு 23.10.1977 அன்று காலமாகிவிட்டார் என்றால், சரிதான்.

4. 1979–ம் ஆண்டே போடி நாயுடுவின் மகனான சீனிவாசலு நாயுடு அவரது பெற்றோர்கள் மற்றும் உடன்பிறந்தவர்களை விட்டுவிட்டு குடும்பத்துடன் தனிக்குடித்தனம் வந்துவிட்டார் என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. சீனிவாச நாயுடுவின் மனைவி பெயர் வசந்தா என்றால், சரிதான். அவருக்கு 3 மகள்கள், இரண்டு மகன்கள் வாரிசுகள் என்றால், சரிதான். தனித்குடித்தனம் வந்த பிறகு சீனிவாசலு நாயுடு ஆயர்பாடி கிராமத்திலேயே நிலத்தை தனியாக குத்தகைக்கு எடுத்து சம்பாதித்து வந்தார் என்றால், அது பற்றி எனக்கு தெரியாது.

5. சீனிவாசலு நாயுடு தனிக்குடித்தனம் வந்த பிறகு முதன் முதலில் எந்த சொத்தை வாங்கினார் என்று தெரியுமா என்றால், தெரியாது. சீனிவாசலு நாயுடுவிற்கு ஆயர்பாடி கிராமம் கீழாண்டை ஒத்தவாடை தெருவில் சொந்தமாக ஒரு வீடு இருந்து அதில் தான் அவர் வசித்து வந்தார் என்றால், சரிதான். அதன் பிறகு 1987–ம் ஆண்டு சீனிவாசலு நாயுடு ஒரு நிலத்தை கிரையம் வாங்கினார் என்றால், அது பற்றி எனக்கு தெரியாது, சீனிவாசலு நாயுடு கிரையம் வாங்கிய எந்த சொத்தை பற்றியும் எனக்கு எதுவும் தெரியாது.

6. கோவிந்தராஜ் நாயுடு காலமான பிறகு அவரது உடன்பிறந்தவர்கள் அனைவரும் கூட்டுக்குடும்பமாக வசித்து வந்தார்கள் என்பதற்கு ஆவணம் எதுவும் பார்த்தேனா என்றால், இல்லை, ஆனால் ஒன்றாக தான் வசித்து வந்தார்கள். எந்தெந்த சர்வே எண்களில் இருந்த சொத்துக்களை பிரித்துக்

கொடுத்ததாக எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால், தனித்தனியாக பிரித்துக் கொண்டு அனுபவித்து வந்தது தான் தெரியும், ஆனால் சர்வே எண்கள் தெரியாது.

7. எந்த தேதி, மாதம், வருடத்தில் பாகம் பிரித்துக் கொடுதேன் என்றால், அது பற்றி நினைவில் இல்லை. அவ்வாறு வாய்மூலமாக பாகம் பிரித்தபோது யார், யார் உடனிருந்தார்கள் என்றால், சம்பத் மந்தடி என்பவர் வீட்டில் தான் பாகப் பிரிவினை நடந்தது, அப்போது அப்பாவு முதலியார், கோவிந்த நாயுடு, சம்பத் மந்தரி, பக்தவச்சல நாயுடு, மணி நாயுடு, ஆனந்தம்மாள், சீனிவாசலு நாயுடு மனைவி, சீனிவாசலு நாயுடு மகன் வெங்கடேசன் ஆகியோர்கள் இருந்தார்கள். போடி நாயுடுவின் மகள்கள் யாரும் அப்போது உடனிருந்தார்களா என்றால், இல்லை. அப்போது சீனிவாசலு நாயுடு மகன் வெங்கடேசன் என்பவருக்கு எத்தனை வயது என்றால், 10 வயது இருக்கும்.

8. பாகப் பிரிவினை சம்மந்தமாக என்னை பேசுவதற்கு யார் அழைத்து என்றால், மணி நாயுடு தான் அழைத்து சென்றார். பாகப் பிரிவினை எத்தனை மணிக்கு நடைபெற்றது என்றால், காலை 10.00 மணிக்கு பேசினார்கள். பாகப் பிரிவினையின் போது எந்தெந்த சொத்துக்கள் பாகம் பிரிக்கப்பட்டது என்றால், பெரியவர்கள் அவர்களாகவே பேசி 4 பாகங்களை பிரித்து சமாதானமாக ஒப்புக் கொண்டார்கள், ஆனால் எந்தெந்த சொத்துக்களை அது போல் பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்று தெரியவில்லை.

9. பாகப் பிரிவினையின் போது கோவிந்தராஜ் நாயுடு, சீனிவாசலு நாயுடு, பக்தவச்சல நாயுடு மற்றும் மணி நாயுடு ஆகியோர்களுக்கு எந்தெந்த சர்வே எண்களில் எவ்வளவு சொத்துக்கள் பாகமாக ஒதுக்கப்பட்டது என்பதற்காக ஆவணம் எதுவும் எழுதி அதில் நான் சாட்சி கையெழுத்து செய்தேனா என்றால், என்னை வெளியே அழைத்து வந்துவிட்டார்கள், அதனால் ஆவணம் எழுதினார்களா என்று தெரியாது, நான் சாட்சி கையெழுத்தும் செய்யவில்லை.

எனவே, உள்ளே என்ன பேசினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால், சரியல்ல, பேசி முடித்த பின்பு தான் நான் வெளியே வந்தேன்.

10. பாகப் பிரிவினையின் போது சகோதரர்கள் 4 பேருக்கும் எவ்வளவு விஸ்தீரண சொத்து பாகமாக ஒதுக்கப்பட்டது என்றால், எனது நிலத்திற்கு பக்கத்தில் உள்ள நிலத்தில் ஒவ்வொருவருக்கும் 66 செண்ட் பாகமாக ஒதுக்கப்பட்டது, தூரத்தில் உள்ள நிலங்களில் யாருக்கு எவ்வளவு ஒதுக்கப்பட்டது என்று தெரியாது.

11. யார், யார் பெயரில் இருந்த சொத்துக்கள் பாகம் பிரிக்கப்பட்டது என்றால், பெரியவர்கள் பெயரில் கூட்டாக இருந்த சொத்தை தான் பாகம் பிரித்துக் கொள்ளப்பட்டது. சீனிவாசலு நாயுடு கிரையம் பெற்ற சொத்துக்கான பட்டா அவர் இருந்த வரை அவர் பெயரிலும், அவர் காலமான பிறகு அவரது வாரிசுகள் பெயரிலும் உள்ளது என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. ஆளுக்கு 66 செண்ட் சொத்தை பாகமாக பிரித்து அனுபவித்து வந்தார்கள் என்று சொல்வதால் அது போல் தனித்தனியாக பட்டா எதுவும் வாங்கிக் கொண்டார்களா என்றால், அது பற்றி எனக்கு தெரியவில்லை.

12. கூட்டுக் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து தான் சீனிவாசலு நாயுடுவின் பெயரில் சொத்தை கிரையம் வாங்கினார்கள் என்று சொல்வது தவறு என்றால், சரியல்ல. 1990–ம் ஆண்டு எனக்கு எத்தனை வயது என்றால், 23 வயது ஆகும். 1983, 1984 ஆண்டுகளில் சீனிவாசலு நாயுடு அவர் பெயரில் சொத்துக்களை கிரையம் பெற்ற போது நான் இளவராக தான் இருந்தேன் என்றால், சரிதான். சீனிவாசலு நாயுடு கிரையம் பெற்ற கிரையப் பத்திரங்களில் நான் உடனிருந்து சாட்சி கையெழுத்து செய்யவில்லை என்றால், சரிதான்.

13. வாய்மூல பாகம் நடந்ததாக சொல்லும் சமயத்தில் போடி நாயுடுவின் மகள்களை ஏன் அழைக்கவில்லை என்றால், அது பற்றி எனக்கு தெரியவில்லை. போடி நாயுடுவின் மூத்தமகள் ஜெயம்மாள் 1996–ம் ஆண்டு தான் காலமானார்

என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. 2–வது மகள் காமாட்சி உயிருடன் தான் உள்ளார் என்றால், சரிதான். இளைய மகள் கமலம்மாள் 2015–ம் ஆண்டு தான் காலமானார் என்றால், சரிதான்.

14. எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளதை போல் 1990–ம் ஆண்டு எவ்வித வாய்மூல பாகமும் ஏற்படவில்லை என்றும், அந்த வாய்மூல பாகத்தில் நான் கலந்துக் கொண்டேன் என்று சொல்வது பொய் என்றால், சரியல்ல. அந்த வாய்மூல பாகப் பிரிவினையில் தாவா சொத்துக்கள் வாணியின் கணவர் மற்றும் அவரது சகோதரருக்கு பாகமாக ஒதுக்கப்பட்டது என்று சொல்வது பொய் என்றால், சரியல்ல. அவ்வாறு பாகம் ஒதுக்கப்பட்டு சொத்துக்களை தனித்தனியாக அனுபவித்து வருவதாக சொல்வது பொய் என்றும், அது போல் பாகப் பிரிவினை எதுவும் நடக்கவில்லை என்றால், சரியல்ல.

15. எனது பிரமாண வாக்குமூலத்தில் பக்கம் 2–ன் கடைசி பத்தியில் யார், யாருக்கு எவ்வளவு சொத்து பாகம் ஒதுக்கப்பட்டது என்பதற்கு ஆவணம் எதுவும் எழுதிக் கொள்ளப்பட்டதா என்றால், இல்லை. எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானதும், கற்பனையானதும் என்றால், சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில் 3–வது பத்தியில் தேவேந்திரனுக்கும், பரசுராமனுக்கும் இடையே நடந்ததாக சொல்லும் வாய்சொல் கிரையம் பற்றி எனக்கு நேரடியாக தெரியுமா என்றால், தெரியாது. எனவே, எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள வாய்சொல் கிரையமும் பொய்யானது என்றும், வாதி வாணி கேட்டுக் கொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

16. சீனிவாசலு நாயுடு கிரையம் பெற்ற சொத்து அவரது தனிப்பட்ட சொத்து என்றும், அந்த சொத்தை அவர் அனுபவித்து வந்து, அவரது காலத்திற்கு பிறகு அவரது வாரிசுகள் அனுபவித்து வருகிறார்கள் என்றும், எனவே, சீனிவாசலு நாயுடு கிரையம் பெற்ற சொத்து குடும்ப சொத்து என்று பொய்யாக சொல்கிறேன்

என்றால், சரியல்ல. நான் சொல்வது போல் 1990–ம் ஆண்டு எவ்வித வாய்மூல பாகமும் ஏற்படவில்லை என்றும், அவ்வாறு வாய்மூல பாகம் நடந்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

வாதிகள் தரப்பில் மறு விசாரணை இல்லை.

ENDING TIME 11.30.A.M.

YUVARAJ
Special Subordinate Judge
Digitally signed by YUVARAJ
Location: Arakkonam.
Date: 2025.10.16 17:35:26 +0530